| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 11.06.2026 |
| STC No.563 /2023 |
| சாட்சி :PW1 |

| | |
|---|---|
| பெயர் : திரு.ஜான்ஜோசப் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அந்தோணி | தொழில் : கூலி |
| கிராமம் : தோப்புப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 42/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகள் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகாரை நான்தான் கொடுத்தேன். 26.01.2022 அன்று மாலை எங்கள் வீட்டில் மறுநாள் பூப்புனித நீராட்டு விழா வைத்திருந்ததால் அதற்கு தேவையான பாத்திரங்களை வேனில் ஏற்றிக்கொண்டு எங்கள் வீட்டில் இருக்குவதற்காக வந்தோம். அந்த வண்டியை பாக்கியராஜ் என்பவர் ஓட்டி வந்தார். அந்த வண்டியிலிருந்த பாத்திரங்களை எங்கள் வீட்டின் அருகே வண்டி திரும்பி செல்லும் போது வண்டி வெளியே செல்ல முடியாத வகையில் பாதையில் முள்வெட்டி ஜான்பீட்டர் போட்டார். அந்த பாதையிலிருந்த முள்ளை எடுக்க சென்றேன். அந்த முள்ளை எடு வண்டி போகட்டும் பின்னர்பேசிக்கொள்ளலாம் என்று நான் கேட்டதற்கு முள்ளை எடுக்ககூடாது தொட்டால் வெட்டுவேன் என்று ஜான்பீட்டர் சொன்னார். தொடர்ந்து கெட்ட வார்த்தைகளால் திட்டினார். தொடர்ந்து இது தொடர்பாக ஊர் பெரியவர்களிடம் சொல்லி இது குறித்து பேசி முடிவு செய்யும் படி கூறினேன். அதற்கு அவர்கள் விசேத்தை நல்ல படியாக முடியுங்கள் என்று கூறினார்கள். அதனால் பிரச்சனை வேண்டாம் என்று நான் விசேத்தை பார்த்துக்கொண்டிருந்தபோது அன்று இரவு 07.00 மணியளவில் ஜான்பீட்டரும், அருள்மேரியும் கல்லை கொண்டு எறிந்தார்கள். அவர்கள் அடித்தில் எனக்கு உடம்பு முடியாமல் சென்றதால் நான் வையம்பட்டி அரசு மருத்துவமனையில்

சிகிச்சை எடுத்துக்கொண்டன். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள், நடந்ததை சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2026 | |
| STC No.563 /2023 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திரு.சூசைராஜ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. விசுவாசம் | தொழில் : பிட்டர் |
| கிராமம் : தோப்புப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 47/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். பிட்டர் வேலை செய்து வருகிறேன். 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 ஜான்சோப் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். ஆஜர் எதிரிகள் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** ஆஜர் எதிரிகள் எனக்கு உறவினரா என்றால் மாமா உறவு முறையாவார். தகாறு நடந்த மறுநாள் ஜான்ஜோசப் வீட்டில் விசேசம் வைத்திருந்தார் என்றால் சரிதான். ஜான்ஜோசப் வீடும், ஆஜர் எதிரிகள் வீடும் தூரம் தூரமாக, தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். ஜான்ஜோசப் வீட்டிற்கு அருகே எதிரிகள் வரவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். ஜான்ஜோசப் அவர்களுக்கு வீட்டிற்கு வாகனம் வந்த போது அதனை மறித்து எதிரி ஜான்பீட்டர் முள்வேலி போட்டதால் தகராறு ஏற்பட்டது என்றால் முள்போட்டதாக சொல்லி கேள்விபட்டேன். 26.01.2022 அன்று தகராறு நடந்த அன்று நான் வீட்டில் இருந்தேன் என்றால் இல்லை. வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜான்ஜோசப் மேற்படி தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் தகராறு குறித்து

எனக்கு தெரியாது, மருத்துவமனை சென்றதாக கேள்விபட்டேன். நான் ஜான்ஜோசப்புக்கும், ஜான்பீட்டருக்கும் தகராறு ஏற்பட்டு அதில் காயமடைந்து மருத்துவமனை சென்றதாக கேள்விபட்டேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் கடந்த 26.01.2022 அன்று இரவு 07.00 மணியளவில் ஜான்ஜோசப் என்பவரின் வீட்டு அருகே இருந்தபோது அவரது வீட்டிற்கு பாத்திரம் ஏற்றிக்கொண்டு ஆட்டோ வந்ததாகவும், அந்த பாதையில் ஆஜர் எதிரி ஜான்பீட்டர் முற்களை வெட்டிபோட்டு பாதையை மறித்தார் என்றும் அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக வார்த்தைகளால் திட்டினார் என்றும் தொடர்ந்து எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ அசிங்கமாக வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் கல்லால் தாக்கினார்கள் என்றும் அதில் அ.சா.1 க்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தாக கூறிவிட்டு தற்போது உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.